gistered as a News paperin Ceylon
P. M. G. NO. H. A 69/300 of 1939.

சிவமயம்

# இந்துசாதனம்

விரோதி வருஷம் (1889) ஆவணிமாதம் 28-ந்வ ஆரம்பமானது

செவ்வாய் வெள்ளிதோறும் வெளிவருவது

மாசில் வீணையும் மாலை மதியமும், வீசுதென்றலும் வீங்கிளவேனிலும், மூசுவண்டறை பொய்கையும் போன்றதே, ஈசனெந்தை யிணையடி நீழலே.

புத். ருஅ] யாழ்ப்பாணம்—வியஹு மாசி மீ உஎ உ (1947 மார்ச் 11 செவ்வாய்க்கிழமை) [இல கூடு

93

# சிவ வழிபாடு

(பிரமஸ்ரீ இ. ஞானசேகரக் குருக்கள்)

முற்றொடர்

பிரமோத்திர காண்டம்

"கண்ணுத லாயநோக்குங்
கண்களே கண்கள்
கறைக்கண்டன் கோயில்புகுங்
கால்களே கால்கள்
பெண்ணொருபா கனைப்பணியுந்
தலைகளே தலைகள்
பிஞ்ஞகனைப் பூசிக்குங்
கைகளே கைகள்
பண்ணவன்றன் சீர்பாடு
நன்னாவே நன்னா
பான்சரிதை யேகேட்கப்படுஞ்
செவிகளே செவிகள்
அண்ணல்பொலங் கழல்நினைக்கு
நெஞ்சமே நெஞ்சம்
அவனடிக்கீ ழடிமைபுகு
மடிமையே யடிமை"

என்றிருப்ப. பூசைக்கு வேண்டிய உபகரணங்களை அனுப்பிவிட்டு பூசை நடக்கட்டும என்று கோயிலுக்குப் போகாதிருப்பாருமுளர்; ஆனால் எங்களது அன்பை வேண்டி எங்கட்கு அருள்செய்யக் கடவுள் ஆலயங்களில் எழுந்தருளியிருக்கின்றார் என்பதை உணராது தங்கள் பொருளுக்காக வீற்றிருக்கின்றாரென நினைந்து நடப்பது அறியாமையேயாம்; ஆன்மாக்கள் செய்யப்படும் வினைக்கீடாக அவரவர்க்கு வேண்டிய தனுகரண புவன போகங்களைக் கொடுத்து இரட்சிக்கும்கடவுளை மெய்யன்போடும் மனம் வாக்கு காயம் என்னும் திரிகரண சுத்தியோடும் சிவாலயத்திற் சேகி, செய்யவேண்டிய சிவத் தொண்டுகளைச் செய்து அவரைமெய்யன்போடு வணங்கும் அவ்வணக்கமே அவருக்கு உகந்ததன்றி, அன்பில்லாது அவருக்குமுன் வைக்கும் திருவமுது முதலியவைகள் அவருக்குப் பயன்பெறுவாம்; கோயில் அதிகாரிகளே இவைகளைச் சிந்தித்துப் பூசா காலந்தோறும் கோயிலிற் சென்று கடவுளை மெய்யன்போடு நமஸ்கரித்து தாம் செயற்பாலனவற்றைச் செய்துவரின் மற்றையோரும் அவ்வாறுசெய்தற்கு பின்னிற்பார்களல்லர்,

சைவாலயங்களிற் செய்யத்தகும் சிவத்தொண்டுகளாவன-

திருவலக்கிடுதல், திருமெழுகிடுதல் தீபம் ஏற்றுதல், அருட் பாக்கள் ஓதுதல், திருநர்தனவனம் வைத்தல் புஷ்பங் கொய்தல், திருமாலை கட்டுதல் இவைகளேயாம்,

இதில், திருவலகிடுதலாவது;

சூரியோதயத்துக்குமுன் ஸ்நானஞ் செய்து சந்தியாவந்தனம் முடித்துக் கொண்டு சிவாலயத்தினுட் புகுந்து, மிருதுவாகிய துடைப்பத்தாற் கிருமிகீடங்கள் சாவாமல் மேற்பட அலகிட்டுக் குப்பையை வாரித் தூரத்துக் கொடுபோய்க் குழியிடுதலாம். திருமெழுக் கிடுதலாவது: ஈன்றணியதும் நோயற்றதுமாகிய பசுவின் சாணியைப் பூமியில் விழுமுன் இலையிலேந்தியாயினும், அது கூடாவழிச் சுத்தநிலத்து வீழ்ந்த சாணியை மேல்கீழ் தள்ளி நடுப்பட எடுத்தா[illegible]

னும் வாவி நதி முதலியவற்றில்வடித்தெடுத்து வந்த சலத்துடன் கூட்டிச் செங்கற்படுத்த நிலத்தையும் சுண்ணப்படுத்த நிலத்தையும் மெழுகுதலாம். கருங்கற்படுத்த நிலத்தைச் சலத்தினாலே கழுவுக. இதிவ்வாறிருக்க தற்காலத்திற் சிலர் ஆலயங்களில் திருவலகிட திருமெழுக்கிட வெட்கப்படுகிறார்கள், பிறர் தங்களை நளினஞ் செய்வார்கள் என்று யோசிக்கின்றார்களே இதென்னஅறியாமை.

திருத்தொண்டர்புராணத்தில் திருமுனைப்பாடி நாட்டிலே திருவாமூரிலே வேளாளர் குலத்தில் புகழனார் என்பவர்க்கு அவர் மனைவியார் மாதினியார் வயிற்றிலே திலகவதியார் என்ற புத்திரியார் அவதரித்து உரிய காலத்திற் செய்ப வேண்டியவைகளெல்லாம் செய்யப்பெற்று சிவபெருமானிடத்திலே மிகுந்த பேரன்பினை உடையவராய் சிவகாருண்ணியம் மேலிட்டவராய் மிகுந்த பத்தி வைராக்கியத்துடன் சிவபெருமானிடத்திலே பக்திமிகுந்த சிவபுண்ணியங்கள்செய்யவிரும்பி கெடிலநதிக்கு வடகரையிலிருக்கின்ற திருவதிகை வீரட்டானம் என்னும் பதியிற்சென்று, பரமசிவனை வணங்கி, சிவசின்னங்களைத் தரித்துத் தினந்தோறும் சூரியோதயத்துக்கு முன் கோயிலின் உள்ளும் புறமும் திருவலகிடுதல், கோமயத்தினால் மெழுகுதல் நந்தனவனங்களிற் சென்று புஷ்பங்களைக் கொண்டுவந்து பலவகையாகிய மாலைகளைத் தொடுத்துச் சுவாமிக்குச் சாத்தக்கொடுத்தல் முதலாகிய சிவபுண்ணியங்களைச் செய்துவந்தார் இன்னும் அநேகர் இவ்விதமாகிய சிவபுண்ணியங்களைச் செய்திருக்க, இவைகளை அறியாது சிவாலயத் திருத்தொண்டிற்குப் பின்னிற்பார்க்கு யாது கூறுவது.

புறவழிபாட்டிற்குள்ள தலம் ஆலயமாகும். அதில் தீர்த்தம் தூபம் தீபம் அபிடேகம் பூமாலை நைவேத்தியம் இவைகளால் வழிபடுதல் மேலாகிய சிவபுண்ணியங்களென ஆகமங்கள் முறையிடுகின்றன. இத்துணை விசேடமுற்ற தேவாலயங்களை அவமதிக்காது அவற்றை அடைந்து,

வாழ்த்த வாயு நினைக்கமட நெஞ்சுந்
தாழ்த்தச்சென்னியுந் தந்ததலைவனைச்
சூழ்த்தமாமலர் தூவித்துதிக்கவேண்டும்

இவ்வாறு செய்தாற்றான் அருமையினும் பேருமையாய் அரிதாகப் பெற்ற மானுட யாக்கையால் அடையும் பெரும்பேறு ஆகும் பதை உணரவேண்டும்.

சைவாலயங்களிலே தீபம் ஏற்றுதலைப்பற்றிக் கூறுவாம்.

தீபம் ஏற்றுதலாவது தாமரை நூல் வெள்ளெருக்கு நூல் பருத்தி நூலென்பவற்றுள் இருபத்தேழிழையாலேனும் பதினென்கிழையாலேனும் கற்பூரப் பொடி கூட்டித் திரிபண்ணி அழுக்கின்றி விளங்கும் விளக்கிலிட்டு [illegible]

# கொடுக்காதீர்!

## என்கிறார் ஜீ. ஜீ.

நீர்வேலியில், அத்தியார் இந்துக் கல்லூரியில், வலிகாமம் கிழக்குப் பகுதிக்கென ஓர் கமக்காரர் சங்கம் நிறுவுவதற்காகச் சென்றவாரம் ஓர் பொதுக்கூட்டம் நிகழ்ந்தது. அக்கூட்டத்துக்குஸ்ரீ ஜீ ஜீ. பொன்னம்பலம் சமுகமளித்தார். கூட்டத்துக்குத் தலைமை வகித்தவர், ஆரம்பத்தில் இதுஓர் அரசியல் சம்பந்தமான கூட்டம் அல்லவென்றும், ஆதலால் ஸ்ரீ ஜீ. ஜீ. பொன்னம்பலம் சமுகமளித்துப் பிரசாரணம் புரிய இருந்தாலும் அவர் முரண்பாடான அரசியல் விஷயமாகப் பேசவொண்ணாது என்றும் கேட்டுக்கொண்டார்.

ஸ்ரீ ஜீ ஜீ. பொன்னம்பலம் தமது பிரசங்கத்தில், சமீப காலத்தில் நிகழ்ந்த வெள்ளத்தினால் யாழ்ப்பாணப் பகுதியில் பயிர்ச்சேதம் உண்டாகிவிட்டதானமையினால், விவசாயிகள் அரசாங்கத்துக் கொடுக்கவேண்டிய வரி நெல்லை இறக்கக்கூடாதென்றும் கூறினார். அவர் மேலும் குறிப்பிட்டதாவது:

"நீங்கள் மிகவும் நட்டமடைந்துவிட்டீர்கள். ஆகவே ஒருமணி நெல்லுத்தானும் அரசாங்கத்துக்குக் கொடுக்க நீதியில்லை. அதிகாரிகள் வந்து நெல்லைக் கேட்டால் வெள்ளத்திலிருந்து அதனை எடுக்கும்படி கூறுங்கள். நீங்கள் ஒற்றுமையாயிருந்தால் உங்கள் லட்சியம் கட்டாயங் கைகூடும்".

விவசாய விஷயமாக இலங்கையின் சேவலநிலைக்கு மிஸ்ரர் சேனநாயக்காவும், சிங்கள மந்திரிகளுமே காரணர் என்று ஸ்ரீ பொன்னம்பலம் கூறி முடித்தார்.

குறிப்புரைகூறிய ஆசிரியர் திரு எஸ். வீரசிங்கம் விவசாயிகள் ஒற்றுமையாயிருக்கவேண்டிய அவசியத்தை வற்புறுத்திப் பேசினார். சேனநாயக்கா முதலிய ஓர் சில தலைவர்கள் செய்யும் பிழைகட்காகச் சிங்கள சமூகத்தினரையே குறைசொல்லக்கூடாதென்றும் கூறினர்.

# இன்னோர் ஹிட்லர்?

## ஜெர்மனியின் புரட்சி மனிதன்

லண்டன் "துணுக்குகள்" என்னும் பத்திரிகையில் "பக்" என்னும் புனைபெயருடன் ஒருவர் பின்வருமாறு எழுதுகிறார்:

"ஜெர்மனியில் உள்ள எனது நண்பர்கள் கூறுவதைப் பார்த்தால் இன்னோர் ஹிட்லர் அங்கே முளைத்துவிட்டார் என்றே நினைக்கவேண்டியிருக்கிறது. ஜெர்மனியில் இப்போது ஓர் புதிய கட்சி தோன்றியிருக்கிறது. அதன் பெயர் ஜெர்மன் புநருத்தாரணக்கட்சி. அதன் தலைவர்களில் டகரர்அல்பிரட்லொட்றிஸ்என்பவரும் ஒருவர்.

"ஜெர்மன் புநருத்தாரணக்கட்சிக் கூட்டத்திலே டக்ரர் அல்பிரட் லொறிட்ஸ் பேசுகிறார் என்றால் எள்ளிட இடமின்றி ஏராளமான ஜனக்கூட்டம் சேர்ந்துவிடும். அவர்க்கு ஏன் இவ்வளவு அந்தஸ்து கொடுக்கப்படுகிறதென்றால், அவர் தோற்றத்தில் ஓரளவுக்கு ஹிட்லரை ஒத்தவரானபடியாலாம். இவரும் ஹிட்லரைப்போலவே உரத்துப் பேசுவாராம். ஹிட்லரைப்போலவே ஆவேசங்கொண்டு பேசுவாராம்.

"ஹிட்லரின் பிரசாரக் கூட்டங்களிற்போல, டக்ரர் அல்பிரட் லொறிட்ஸினுடைய கூட்டங்களிலும் அடிபிடி, சண்டைகளுக்குக்குறைவில்லை."

# அதிகார வெறி!

## லண்டனிற் சமதர்மிகள் அறிக்கை

சென்றவாரம் இங்கிலாந்து லண்டன்மாநகரிலே, பிரிட்டிஷ சக்கராதிபத்தியத்தில் உள்ள சமதர்மிகளின் மகாநாடு ஒன்று நிகழ்ந்தது. இலங்கைப் பிரதிநிதிகளாக டக்ரர் எஸ். ஏ. விக்கிரமசிங்ஹ, பிரேமலால்குமாரசிறீ என்பவர்கள் மேற்படி மகாநாட்டிற் சமுகமளித்துப் பங்குபற்றினர்,

மகாநாடு முடிந்ததும் இச்சமதர்மிகள் ஓர் கூட்டுஅறிக்கை விடுத்திருக்கிறார்கள். இந்த அறிக்கைக்குப் பதினொருநாட்டுப் பிரதிநிதிகள் ஒப்பம் வைத்திருக்கிறார்கள். இந்தியா, பர்மா, இலங்கை என்னும் அடிமை நாடுகளுக்கு உடனே பூரண சுதந்திரம் வழங்கவேண்டும் என்று அந்த அறிக்கையிற் கேட்டிருக்கிறார்கள். இந்த அறிக்கை மேலும் கூறுவதாவது:—

"இன்று அமெரிக்காதான் மிகப் பெரிய வல்லரசாக விளங்குகிறது. அதன் இராணுவ பலம், பொருட் பலம், செல்வப்பலம் பெரிதாக இன்று உள. இவற்றின் பயனாக அமெரிக்கா, பிரிட்டிஷ் நாடுகளைத் தனக்குப் பரிசாகப்பெறப் பகீரதப் பிரயத்தனம் செய்துவருகிறது.

"இன்று இங்கிலாந்து அமெரிக்காவின் வாலில் தொங்கும் அவ்வளவு கேவல நிலைக்கு வந்துவிட்டது. கைப்பொம்மையாகிவிட்டது. அமெரிக்கா எதனைச் சொல்லுகிறதோ அதற்குத் 'ததாஸ்து'ச் சொல்லுவதுதான் இன்று இங்கிலாந்தின் வேலை.

"அமெரிக்காவின் கொள்கை, அதனைக் கூடிய சீக்கிரத்தில் சோவியத் ருஷியாவுடன் போர்முனைக்குக் கொண்டுபோய் விடலாம். அந்த நேரத்தில், பிரிட்டனையும் தன்பக்கத்தில் வைத்துக்கொள்ள அமெரிக்கா முனைந்து நிற்கிறது".

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்க அந்தணர் வானவ ரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல் லாம்அர னாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே.

# இந்து சாதனம்.

யாழ்ப்பாணம், வியஹு
மாசிமீ ௨௭௨ செவ்வாய்க்கிழமை

## சைவக்கல்லூரிகளை விருத்தியுறச் செய்க

I

இலங்கை வித்தியாபகுதி மந்திரியின் பெருமுயற்சியால் இலவசக்கல்வி இந்நாட்டில் வந்த பின் கல்விகற்கும் பிள்ளைகளின் தொகை, முந்தியிருந்த தொகையைக் காட்டிலும் இருமடங்குக்கு மேலே அதிகப்பட்டு விட்டதெனச் சொல்லினும் மிகையாகாது; இந்த இலவசக் கல்வியின் பயனுக சுதேச மொழிப் பாடசாலைகளில் முந்திக் கல்வி பயின்ற பிள்ளைகளின் தொகை பலவற்றிற் குறைந்து போக, பலவற்றில் உள்ளபடியே யிருப்ப, ஆங்கில கலாசாலைகள் கல்லூரிகளிற் சென்று சேர்ந்துபடிக்கும் பிள்ளைகளின் தொகையே மிகவும் அதிகப்படலாயின வெனலாம். யாழ்ப்பாணப் பெரும்பிரிவிலுள்ள தமிழ்ப் பள்ளிக்கூடங்கள் விஷயமாகச் சொல்லுகில், இற்றைக்கு இருபத்தைந்து முப்பது வருடங்கட்கு முன் இந்த வடஇலங்கையிலே பாதிரிமார் வைத்து நடத்திய தமிழ் வித்தியாசாலைகள் மிகப் பலவாக, சைவசமயத்தவர்கள் தனித்தும் சங்கமாக இல்லையேற் சபையாகச் சேர்ந்தும் நடத்திய பள்ளிக்கூடங்கள் மிகச் சிலவினுஞ் சிலவேயென்று சொல்லலாம்; அதன் பின்னர் சைவவித்தியா விருத்திச் சங்கத்தார் யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியதிகாரசபையார் என்னுமிருபகுதியாரும்பலசைவ வித்தியாசாலைகளைக் காலந்தோறும் வேண்டிய வேண்டிய இடங்களிற் புதியனவாகத் தாபித்தமையினுலும், மிஷனரிமார் வைத்து நடத்திவந்த வித்தியாசாலைகளுட் சிலவற்றைச் சைவவித்தியா விருத்திச் சங்கத்தார் தாங்களே விலைகொடுத்து வாங்கித் தங்கள் பொறுப்பிற் சைவமுறைப்படி நடத்தத் தொடங்கியமையினுலும், சைவச்சிறுவர்களுஞ் சிறுமிகளும் சைவ சமய முறைப்படியும் தங்கள் தேச ஆசாரங்களின்படியும் தமிழ்க் கல்வியைக் கற்றல் இயல்வதாயிற்று. இலவசக் கல்வி காரணமாகத் தமிழ்க் கல்வி பயிலும் பிள்ளைகளின் தொகை இனி அதிகப்பட்டு வரினும், அப் பிள்ளைகளையெல்லாம் ஏற்று அவர்களுக்குக் கல்வி பயிற்றுவதற்கான சைவத்தமிழ் வித்தியாசாலைகள் போதியன இப்பொழுதுமுள்ளன.

ஆனல், சைவச் சிறுவரும் சிறுமியரும் படித்தற்காகிய விடுதிகளோடு கூடிய சைவக்கலாசாலைகளுங் கல்லூரிகளும், அந்நிய மதத்தினரால் வைத்து நடத்தப்படும் விடுதிக் கல்லூரிகள் கலாசாலைகளைக் காட்டிலும் தொகையிற்குறைந்தனவாகவே இன்னு மிந்நாட்டிற் காணப்படுகின்றன; சைவசமயத்தவர்களால் நடாத்தப்படும் சில கலாசாலைகள் பெயரளவிற் கல்லூரியென விருந்தாலும், விடுதிச்சாலை முதலியன வில்லாமையினுலே அவைகள் பன்னூற்றுக் கணக்கான மாணவர்கள் விடுதி வீட்டில் வசித்துக் கல்வி பயிலுதற் கிடமாகிய கல்லூரிக ளாகமாட்டா. ஆயினும் இக் கலாசாலைகளைப் பூரணமான கல்லூரிக ளாக்குதற்காகிய முயற்சிகள் மேற்படி கலாசாலைகளின் அதிகாரிகளாற் செய்யப்படுகின்றன வென்பதை யறிவேம்.

சைவ சமயத்தவர்களால் இப்பொழுது வைத்து நடத்தப்படும் ஆங்கிலக் கல்லூரிக ளானவை உயர்தர வகுப்புப் பிள்ளைகள் கல்வி பயிலுதற்காகிய ஒழுங்குகள் உபகரணங்களோடு கூடியனவாய், பலமாணவர்கள் தங்கியிருந்து படித்தற்காகிய விடுதிச்சாலைகளையுடையனவாய்ப் பூரணமாகக் படினும், இலவசக் கல்வி காரணமாக இக்காலத்தில் அதிகப்பட்டுவரும் சைவ மாணவர்க்குப் போதியனவாகுமோ என்பது சந்தேகம்; இங்கே நாம் சைவக்கல்லூரிகளென்றது சைவச் சிறுவர்கள் கல்வி பயிலுதற்காகிய கல்லூரிகளையேயாம்; பழைய சைவக்கல்லூரிகளு ளொன்றெனவைத் தெண்ணத்தக்க சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி, இந்தச் சமயத்தில் அரசினருக்கு மத்திய கல்லூரியாக உதவப்பட்டமை பெரிதும் வருந்தத் தக்கதாம்; இக் கல்லூரி ஸ்தாபிக்கப்பட்டுள்ள இடம் இன்னும் வேண்டிய கட்டடங்களையும் விடுதிச்சாலையையும் அமைத்தற்காகிய பரந்த மத்திய ஸ்தானமாக வுள்ளதெனலாம்; மற்றைச் சைவக் கல்லூரிகளையுங் கலாசாலையையும் வைத்து நடத்தும் அதிகார சபையார், குறித்த விக்ரோறியாக் கல்லூரி கைமாறுங் காலத்தில், அரசினர் பொறுப்பிற் போகவிடாது தாங்கள் வாங்கி ஆகவேண்டிய திருத்தங்களைச் செய்து நிர்வகித்து நடத்தியிருந்தாற்சைவ மாணவர்க்குப் பெரிதும் நன்மையா யிருக்கும்.

---

### இலங்கைத் தபாற்பகுதித் தலைவர்

இலங்கைத் தபாற்பகுதித் தலைவராகிய மிஸ்ரர் ஜே பி. அப்பிள்பி என்பவர் இவ்வாண்டுடன் தம் பதவியினின்றும் இளைப்பாறிக் கொள்ளுவர் என்று ஓர் செய்தி கூறுகிறது.

---

### இந்தியர்க்குச் சிறைத்தண்டனை

மலாய் நாட்டில் கெடா இராச்சியத்தில் தோட்டங்களிற் கலகம் புரிந்து அங்கிருந்த வெள்ளைத் தோட்டத் துரைமார்மீது பலாத்காரம்புரிந்தார்களென்று சென்றவாரம்சுங்கை பட்டாணி நீதிஸ்தலத்தில் 59 இந்தியத் தொழிலாளர்க்கு தனித்தனி 6 மாசச் சிறைத் தண்டனையும், மூன்று இந்தியப் பெண்களுக்குத் தனித்தனி ஒருமாசச் சிறைததண்டனையும், இன்னேர் இந்திய... 50 ... அபராதமும் விதிக்கப்பட்டது.

# பிரிவினை வேண்டுமா?

## காங்கிரஸ் அதற்கும் சம்மதம்!

பிரிட்டிஷார் முதலில் வெளியேற வேண்டும். அதன்பின் இந்தியர் தம் பிணக்குக்களைத் தாமே தீர்த்துக் கொள்ளுவர் என்பதே காங்கிரஸ் அன்றுதொட்டு இன்றுவரை கொண்டுள்ள நிலையாகும. பிரிட்டிஷார் அடுத்த ஆண்டு ஜூன்மாதத்துக்குமுன் வெளியேறுவதாகக்கூறிவிட்டார்கள். ஆகவே இந்தியர் தம்மிடையேயுள்ள பிணக்குகளைத் தீர்க்க வேண்டியதுதான் பாக்கி, இவ்விஷயமாகச் சென்றவாரம் கூடிய காங்கிரஸ் காரியநிர்வாகசபை ஓர் புரட்சிகரமான தீர்மானத்தை நிறைவேற்றி யிருக்கிறது. இந்தியாவில் உள்ள சகல மக்களுக்கும் சுயநிர்ணய உரிமை இருக்கிறது என்பதைக் காங்கிரஸ் மீண்டும் வற்புறுத்துகிறது. சிலமாகாணங்கள் மற்றும் மாகாணங்களுடன் சேர விரும்பாது தனித்தியங்க விரும்பினுல், அப்படிச் செய்யக் காங்கிரஸ் அநுமதிக்கிறது: பெருவாரியான முஸ்லீம்களைக் கொண்ட மாகாணங்கள் ஓர் சமஷ்டி அரசியலிற் சேர விருப்பமில்லாவிட்டால், அவை பிரிந்து பாகிஸ்தானத்தையோ வேறெந்த ஸ்தானத்தையோ நிறுவலாம் என்று காங்கிரஸ் கூறுகிறது.

●

**பாஞ்சால, வங்காள நிலைமை**

பாதகண்டத்தில் உள்ள முஸ்லிம் மாகாணங்களுக்கு எப்படித் தனித்தியங்கிப் பாகிஸ்தான் அமைக்க உரிமையுண்டோ, அதேபோல பாஞ்சாலம், வங்காளம் என்னும் மாகாணங்களில் 45 விகிதத்திற்கு மேல் உள்ள சீக்கியர்களும் ஹிந்துக்களும் பாகிஸ்தானிற் சேராமல்இருக்க அவர்களுக்கு உரிமை இருக்கவேண்டும் என்பதைக் காங்கிரஸ் வற்புறுத்துகிறது, பாஞ்சாலத்தில் லீக்கரின் ஆட்சிக்குட்பட விரும்பாத சீக்கியர்க்குத் தனி இராச்சியம் அமைக்கவேண்டும் என்றும், மேற்கு வங்காளத்தைப் பிரித்து ஹிந்துக்களிடம் கொடுக்கவேண்டும் என்றும் காங்கிரஸ் கருதுகிறது. சுருங்கச் சொல்லுங்கால், முஸ்லிம் லீக் எந்த ஆயுதத்தால், இந்திய சுதந்திர இயக்கத்தை நசுக்கிச் சர்வாதிகாரம் வகிக்க முயன்றதோ அதே ஆயுதத்தால் இன்று தாக்கப்படுகிறது. பாஞ்சாலத்தையும், வங்காளத்தையும் பிரித்துவிட்டால் பாகிஸ்தான் பாடு அதோகதிதான்.

●

**சமரசத்துக்கு வேண்டுகோள்**

இப்படித் தீர்மானித்தபோதிலும், காங்கிரஸ் கடைசி முறையாக லீகர்க்கு ஓர் சமரச அழைப்பு விடுத்திருக்கிறது, "இனியாவது சமரச மனப்பான்மை கொண்டு அரசியல் நிர்மாண சபையிற்சேர்ந்து ஒத்துழைக்கவேண்டும் என்று காங்கிரஸ் லீக்கர்களை அழைக்கிறது, ஆனல் இந்த அழைப்பை லீக் பிரமுகர்களில் ஒருவரும், இடைக்கால அரசாங்க அங்கத்தவராயுமுள்ள மிஸ்ரர் சந்திரிகர் என்பவர், துப்பாக்கி காட்டிக் காங்கிரஸ் பயமுறுத்துகிறது, இந்த நிலைமையில் முஸ்லிம்லீக் ஒத்துழைக்க முடியாது என்கிறர்.

●

**பீகாரில் மகாத்மா**

மகாத்மா காந்தியடிகள் சென்ற புதன்கிழமை பீகார் மாகாணத்துக்கு விஜயம்செய்து, வகுப்புக் கலவரங்களாற் பாதிக்கப்பட்ட இடங்களைப் பார்வையிட்டார் பீகாரில் எத்தனை ... இருப்பர் என்று இப்போது சொல்லமுடியாது.

●

**சேர்ச்சில் எதிர்ப்பு**

இந்தியாவை விட்டுப் பிரிட்டிஷார் அடுத்த ஆண்டு ஜூன் மாதத்துடன் வெளியேறுவது, இந்தியாவுக்கே ஆபத்தாக முடியும். பிரிட்டிஷ் அரசாங்கத்துக்கு அநர்த்தமாகையால், அப்படிச் செய்யவொண்ணுது என்று சேர்ச்சில் கோஷ்டியினர் பிரிட்டிஷ பாராளுமன்றத்துப் பொதுமக்கள் சபையில் எடுத்தாண்ட தீர்மானம் தோல்வியடைந்துவிட, தொழிற்கட்சி அரசாங்கத்தின் கொள்கையை ஆதரிக்கும் தீர்மானம் 337 அங்கத்தவர்களின் ஆதரவு பெற்று நிறைவேறியது.

●

**லீக்கிற்கு அழைப்பு**

இங்கிலாந்து கைமாற்றிக் கொடுக்கும் அதிகாரத்தைப் பெற்றுக்கொள்ளுவதற்குரிய வழிவகைகளைச் செய்வதற்கு ஓர் மகாநாடு கூடிப் பேசப் பிரதிநிதிகளை அனுப்புமாறு காங்கிரஸ முஸ்லீம் லீக்கிற்கு அழைப்பு விடுத்திருக்கிறது.

●

**மந்திரசபை**

பிரிட்டனின் அதிகாரமாற்றத்துக்குப் பூர்வாங்கமாக, இப்பொழுதுள்ள இந்திய இடைக்கால அரசாங்கத்தை கூட்டுப் பொறுப்பு வாய்ந்த ஓர் மந்திரசபைபோல நடத்த வேண்டும் என்றும் காங்கிரஸ் காரிய நிருவாக சபை பிரிட்டனைக் கேட்டுக்கொள்ளுகிறது.

●

**உண்ணுவிரதம்?**

பீகார் மாகாணத்திலுள்ள இந்துக்கள் மனம் மாறுபடாதிருப்பின் மகாத்மாஜி சாகும்வரை உண்ணுவிரதமிருக்க உத்தேசித்திருப்பதாக அறியப்படுகிறது. இது காங்கிரஸ் காரியசபை அங்கத்தினர்களுக்கு தெரிவிக்கப்பட்டுள்ளதாகவும் கூறப்படுகிறது. பலாத்காரப் பாதையில் செல்லும் இந்தியாவிலே - முஸ்லிம்களும் இந்துக்களும் சதா சண்டையிட்டுக் கொண்டிருக்கும் இந்தியாவிலே - தாம் வாழ விரும்பவில்லையென காந்திஜி பல தடவைகளில் கூறியிருப்பதும் இதனை ஆதரிப்பதாகக் கூறப்படுகிறது, காசியிலிருந்து கான் அப்துல்கபார்கான் இரவு புறப்பட்டுள்ளதும் எதிர்பாராத இந்த விஷயமாகவே இருக்குமென்றும் நம்பப்படுகிறது. காந்திஜீயை இந்த முடிவினின்றும் விலக்குவதற்கு ஏற்ற ஆள் கான்அப்துல் கபார்கானேயென காங்கிரஸ் கருதுவதாகவும் அறியப்படுகிறது.

---

### இலங்கைப் பொலிஸ்தலைவர்

இலங்கைப்பொலிஸ் தலைவரான மிஸ்ரர் அலுவிகாலா இந்தியாவிற்கு விஜயஞ் செய்து, சென்னை, டெல்கி பம்பாய் முதலாம் இடங்களிலே பொலிஸ்தாபனங்கள் எவ்வாறு வேலைசெய்கின்றன என்பதை அறிய உத்தேசித்திருக்கிறர். இவ்விஷயமாக, உள்நாட்டு திருவாக சபையின் அங்கீகாரத்தைக்கோரி அவர் மனுச்செய்திருக்கிறர்.

---

### திருவள்ளுவநாயனுர் குருபூசை

ஷை குருபூசை, யாழ்ப்பாணம் இந்துமகாசபை ஆதரவில், வண்ணுர்பண்ணை, நாவலர்வீதி லங்கா கல்லூரி மண்டபத்தில் சென்ற சனிக்கிழமை (8-3-47)இரவு 7 மணி தொடக்கமாக நடைபெற்றது. பூசை முதலியவற்றுக்குப் பின், சபைத் தலைவர் திரு. சி. நாகையா அவர்கள் திருவள்ளுவ நாயனுர் சரித்திரத்தைச் சொற்பொழிவு செய்தார். பிரசாதம் வழங்கப்பட்டபின் விழா இனிது நிறைவேறியது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழன்!-துரோகியல்ல

## நாட்டின் நலத்துக்குழைப்பது தேசத் துரோகமா? கூடாச் செயலா?

### ஸ்ரீ நடேசன் தம் நிலையை விளக்குகிறார்

“நான் தமிழன்; தமிழன் என்று கூறுவதிற் பெருமையடைபவன்; தமிழன் என்று சொல்லித் தலைநிமிர்ந்து நிற்பவன். ஐந்து வயது தொடக்கம் இன்றுவரையும் தமிழ் கற்றுவருகிறேன். தமிழ்மொழி தெய்வமொழி; அன்பை வளர்ப்பது. அத்தகைய மொழியில் நான் வளர்ந்திருக்கிறேன்; தமிழர் கூடி வாழும் சுபாவமுடையவர். இன்னா செய்தாரை ஒறுத்தல் அவர்நாண நன்னயம் செய்துவிடல் என்ற பொய்யாமொழியான் வார்த்தைகட்கிலக்காகவாழ்பவர்தமக்கென வாழாப் பிறர்க்குரியாளர் எனவே, தமிழை ஓரளவு உணர்ந்துள்ள யான் மற்றைய சாதியார் சமூகத்தாருடன் கூடிவாழச் சொல்வேனேயன்றி முரண்படும்படி சொல்லேன்.”

என்றிவ்வாறு சென்றவாரம் ஏழாலையில் நிகழ்ந்த ஓர் பெருங் கூட்டத்தில் அரசாங்கசபைப் பிரதிநிதி ஸ்ரீ சு. நடேசன் கூறினார். இக்கூட்டம் வருகிற பாராளுமன்றத் தேர்தலில் காங்கேசன்துறைப் பகுதிக்கு ஸ்ரீ நடேசனை ஆதரிப்பதற்காகக் கூட்டப்பட்டது. ஏழாலை மத்திய சைவ மகாஜன வித்தியாசாலையில் நிகழ்ந்த கூட்டத்துக்கு ஏழாலையிலும் அயற் கிராமங்களிலும் இருந்து பல்லாயிரக் கணக்கில் ஜனங்கள் விஜயம்செய்து எள்ளிட இடமின்றி இருந்தனர்.

கூட்டத்துக்கு ஸ்கந்தவரோதயக் கல்லூரி ஆசிரியர் திரு. சி. முருகேசு தலைமை வகித்தார். வைத்தியர் திரு. ஐ. பொன்னையா, ஆசிரியர் திரு. E. இராசதுரை, திரு. T. கந்தையா, திரு. E. சபாரத்தினம், உள்நாட்டு மந்திரி ஸ்ரீ அ. மகாதேவா, வழக்கறிஞர்கள், திரு. ரீ. லி. இராசரத்தினம், S. R. கனகநாயகம், திரு. வீ. இராசநாயகம், திருநெல்வேலிசைவாசிரிய கலாசாலை அதிபர் திரு. எஸ். சுவாமிநாதன், ஷை பாடசாலை மனேஜர் திரு. E சுந்தரமூர்த்தி என்பவர்கள் திரு நடேசன் இத்தொகுதிக்கு அபேட்சகராக முன்வருவதை ஆதரித்து, காங்கேசன்துறையில் சீமந்துத் தொழிற்சாலையை நிறுவவும், இராணுவ வைத்தியசாலையைச் சிவில் வைத்தியசாலையாக்கவும், நிலாவரை நீர்ப்பாசன வேலையை ஆரம்பிக்கவும் ஆசிரியர்களின் வேதன உயர்ச்சி விஷயமாகப் பாடுபடவும், இராணுவத்தினர் நிலம் பிடித்ததால், ஊரவர்கள் கஷ்டப்பட பின் அந்நிலங்களைப்பெற்றுக் கொடுக்கவும் காரணராயிருந்தவர் ஸ்ரீ நடேசன்தான் என்பதைப் பேச்சாளர்கள் விளக்கினர். இலங்கையிற் கல்வி விஷயமாகச் செலவிடும் பணத்தில்,

> யாழ்ப்பாணம் ஆளுக்கு 1 ரூபா வீதமும், கொழும்பு 15 சத வீதமும் காலி முப்பத்தாறு சத வீதமும் பெறுகின்றன. யாழ்ப்பாணத்தவரிடம் இவ்வளவு கண்ணியமாகச் சிங்களர் நடக்கும்போது கேவலம் சிறுபான்மையினராகிய நாம்வகுப்புவாதம்பாராட்டி அவர்களைத் துவேஷிப்பது முறையல்ல

என்றும அவர்கள் கூறினர்.

திரு. நடேசன் தமது சொற்பொழிவில் இதன் ஆரம்பத்திற் கூறியவாறு குறிப்பிட்டுப் பின் வருமாறு பேசினார்:

“ராவ்பகதூர் தாமோதரம்பிள்ளையை ஈன்ற ஏழாலையூர் தமது உத்தமகுணல் ஈழத்தைச் சிறப்பித்ததுமன்றித் தென்னிந்தியாவையும் புனிதப்படுத்தியது. “கம்பன் வீட்டுக் கட்டுத்தறியும் பாடும்” என்பர். பிள்ளை பிறந்த மண்ணும் தமிழ் மணக்கும். தன்னிடம் வந்தவரைத் தமிழ்பேசப் பண்ணும். ஒருபோதும் தமிழில் சொற்பொழிவு செய்தறியாத மந்திரி மகாதேவாகூட இம்மண்ணில் மிதித்தவுடனே தமிழில் பேசத் தொடங்கிவிட்டார். இது மண்ணின் விசேடத்தைக் காட்டுகின்றது. சில காலத்துக்குமுன் நான் குடும்ப சகிதமாகப் பழனிக்குச் சென்றிருந்தேன். அக்காலத்தில் மகாத்மா காந்தியடிகள் அங்கு விஜயம் செய்திருந்தார். ஒருவர் பூசிய சாந்து மற்றொருவர் மார்பிற் படியவும், எள் போட்டால் அது விழாதபடியுமாகப் பெருந் திரளான மக்கள் அங்கு குழுமினர். ஆன்ம வளர்ச்சிக்கான ஞானோபதேசங்களை அடிகள் பொழிந்துகொண்டிருந்தனர். அப்போது நிசப்தம் நிலவியது. இவ்விடத்தில் நடப்பது அரசியற் கூட்டம். இதில் அமைதி காண்டல் அரிது. ஆயினும் இக்கூட்டத்திலொரே அமைதி நிலவுகிறது. இவ்வமைதி எனக்கு அப்புனிதமான பழனியை நினைவூட்டுகிறது.

தமிழ்க் காங்கிரசில் சிலகாலம் அங்கத்தவனாயிருந்தேன். ஐம்பதுக்கைம்பது என்னும் கொள்கையை ஆதரித்தவர்களில் நானும் ஒருவன். ஏனைய சிறுபான்மைச்சாதியினராகியசோனகர், பறங்கியர், ஐரோப்பியர் தொடக்கத்தில் எம்மோடு சேர்ந்து நின்றனர். பின் விலகினர். அதனால் நாம் வலியிழந்தோம். ஐம்பதுக்கைம்பது பெறல் முயற்கொம்பு என்பதை உணர்ந்தேன். ஒருகாலத்தில் சிங்களவர் 45 விகித ஸ்தானங்கள் தந்து எம்மோடு இணக்கமுற விரும்பினர் அவர்கள் விருப்பத்தைத் திரு. ஜி.

தொடர்ச்சி 4 ம் பக்கம்

# பறந்துவிட்டார்!

## சேர். ஒலிவரின் யாத்திரை

சேர் ஒலிவர்குணத்திலகா சென்ற சனிக்கிழமை காலை கொழும்பிலிருந்து இங்கிலாந்துக்கு விமானமூலம் போய்விட்டார்.

அநேக காலமாக சேர் ஒலிவர் தமக்குரிய லீவை எடுக்கவில்லையாம். ஆனபடியால் அந்தலீவை இப்போது பெற்று 6 மாத காலத்துக்கு இங்கிலாந்தில் வசிப்பாராம். அவர் அநேகமாக அடுத்த ஆகஸ்டில்தான் இலங்கைக்கு மீளுவர் எனச் சொல்லப்படுகிறது அவர் வரும்வரை மிஸ்ரர் லி. ஈ ஜோன்ஸ் நிதிக்காரியதரிசியாகக் கடமையாற்றுவார்.

சேர் ஒலிவர் ஊர்ப்பாதுகாப்பதிகாரியாயிருந்த காலத்தில்அவர்செலழித்த பணம் சம்பந்தமாக 687 ஆட்சேபனைக் கணக்குப் பரிசோதனை அதிகாரி கிளப்பினாரே: அவற்றின் கதி இதுவரை என்னாயிற்று? என்பதையறிய இலங்கை மக்கள் அவாவுறுகின்றார்கள். அவர் லீவிற் செல்லமுன், இந்த ஆட்சேபனைகளுக்குச் சமாதானம் சொல்லுவார் என்று எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் அவ்வாட்சேபனைகளின் கதி என்னாயிற்றென்பது தெரியவில்லை.

இது இவ்வாறாக, சேர் ஒலிவர் நிதிக்காரியதரிசிப் பதவியை விட்டு விலகி, பாராளுமன்றத்து மேற்சபையிற் சேர்ந்து நிதிமந்திரியாக வருவர் என்று ஓர் நம்பிக்கை இருந்தது. ஆனால் தனக்கு அப்படியான எண்ணம் எதுவும் இல்லை என்றும், தான் இப்போதிருந்தவாறே நிதிப் பகுதிக்கு அதிகாரியாக இருக்க விரும்புவதாகவும் சேர் ஒலிவர் ஓர் பத்திகை நிருபருக்குக் கூறினாராம்.

### ஆங்கிலம் கட்டாயபாடம்!

ஆப்கானிஸ்தானத்தின் பாடசாலைகளில், ஆங்கிலத்தையும் ஓர் கட்டாய பாடமாக்க அந்நாட்டு அரசாங்கம் தீர்மானித்துப் பல அமெரிக்க ஆசிரியரை நியமனம் செய்ய நிர்ணயித்திருக்கிறது.

## ஐ. தே. க. அபேட்சகர்

### ஒரு சிலர் நியமனம்

ஐக்கிய தேசியக்கட்சி தன்னுடைய தலைவரை எந்தப் பகுதிக்கு விடுவதென, தீர்மானித்துவிட்டது. அத் தீர்மானப்படிக்கு மிஸ்ரர் சேனாநாயக்கா மீரிகமத் தொகுதியில் அபேட்சகராக நிற்பாராம். அவர்க்கெதிராக அவருடைய மருகரும், சமசமாஜக்கட்சி அங்கத்தவருமாகிய மிஸ்ரர் எட்மன்ட் சமரக்கொடி போட்டியிடுவர்.

81 ஸ்தானங்களை விரும்பி 200 பேர்வரை கட்சிக்கு மனுச்செய்தனர். இவர்களைத் தெரிவு செய்வதிற் கட்சிப்பிரமுகர்க்குத் தலைவலி கண்டுவிட்டதாம். ஆகவே ஓர் சில தொகுதிக்குரிய அபேட்சகரை மாத்திரம் தெரிவுசெய்துவிட்டு. மீதிப்பேரைத் தெரிவுசெய்தலை இன்னோர் கூட்டத்துக்குத் தவணையிட்டனர். இப்போது தெரியப்பட்டவர்களும் அவர்கட்குரிய தேர்தற் றொகுதிகளும் பின்வருமாறு:

டி. எஸ். சேனாநாயக்கா மீரிகம, ஜோர்ஜ் சீ. டீ சில்வா கண்டி, எஸ். டப்ளியூ. ஆர். டீ. பண்டாரநாயக்கா அத்தனகலை, ஜே. எல். கொத்தலாவலை தொடனகலந்தா, எச். டபிள்யூ. அமரசூரியா காலி, அ. மகாதேவா யாழ்ப்பாணப்பட்டினம், ஜே ஆர். ஜெயவர்த்தன களனி, சுஸந்த பொன்சேக்கா பாணந்துறை, பீ. டீ. எஸ். குலரத்தின பலப்பிற்றிய, ஏ. ரத்னாயக்கா வத்தகம, சைமன் அபயவிக்கிரம படிகம.

## ஆஸ்திரேலியாவின் பயம்

### ஆசிய மக்களின் நட்புப்பெற ஆவல்

இந்தியா சீக்கிரம் விடுதலையடைந்து பூரண சுயராச்சிய நாடாக விளங்கப் போகிறது. எனவே இதுகாறும் நடந்து வந்ததுபோல ஆஸ்திரேலியாவை யாரும் தாக்கினால் இந்தியா உதவிக்கு ஓடிப் போகமாட்டாது. இதுபோன்று ஆஸ்திரேலியாவின் அண்டை நாடுகளான ஜாவா முதலிய தேசங்கள் சுதந்திரமடையப் போகின்றன. இவற்றையெல்லாம் உத்தேசித்து ஆஸ்திரேலியா ஓர் பசிபிக் மகாநாட்டைக் கூட்ட நிச்சயித்திருக்கிறது. ஆஸ்திரேலியாவும், அதனைச் சுற்றியுள்ள நாடுகளும் எவ்வாறு பரஸ்பரம் ம்மைப் பாதுகாத்துக் கொள்ளலாம், தம் பொருளாதாரநிலையை எவ்வாறு விருத்தி செய்யலாம் என்னும் இன்னோரன்ன விஷயங்கள் இம்மகாநாட்டில் விவாதிக்கப்படுமாம்.

இந்தப் பசிபிக்மகாநாட்டிற் பங்கு பற்றும்படி, இலங்கைக்கும் அழைப்பு விடுக்கப்படுமென எதிர்பார்க்கப்படுகிறது.

இதுவரை ஆஸ்திரேலியா, வெள்ளையர்க்குத்தான் சொந்தமென்றும், அங்கே வெள்ளையர்தான் ஏகவுரிமையனுபவிக்கலாம் என்றும் கூறிவந்த ஆஸ்திரேலியா இப்போதாவது தனது அயல் தேசங்களான “கறுப்பர்” நாடுகளுடன் ஒத்துழைக்க முன்வந்திருப்பதும் காலத்தின் கோலந்தான்!

### யப்பானில் இருக்கும் இந்தியசேனை

ஜப்பானில் இப்போது 10,000பேர்க்கு மேற்கொண்ட இந்திய காவற்படை இருக்கிறது ஜப்பானை ஏகாதிபத்திய வல்லரசுகள் ஆக்கிரமித்து அதனை அடிமைகொள்வதற்கு இந்தியா உதவிபுரியக் கூடாது என்ற உணர்ச்சி இந்திய மக்களிடையே பலமாக இருந்துவந்தது. இடைக்கால அரசாங்கத்தில் பண்டிதநேரு பிரதமராகியதும், இவ்விஷயம் பிரிட்டிஷ் அதிகாரிகளுக்குப் பலமாக வற்புறுத்தப்பட்டது. இதன் பயனாக, கூடிய சீக்கிரத்தில் ஜப்பானிலிருந்து இந்திய சேனையை நீக்கிவிடுவதென்று பிரிட்டிஷ் அரசாங்கம் நிச்சயித்துவிட்டது.

# நினைக்கிறார்கள்!

## சிங்களத் தலைவர்களின் நன்றி

“இன்று எங்கள் இலங்கை சுயராச்சியப் பாதையை நோக்கி வெகுவாக முன்னேறிப் போகின்றது. இதற்குக் காரணர் யார்? இன்று பட்டம் பதவிகளில் வீற்றிருப்பவர்களல்ல. ஆனால் 1915-ம் ஆண்டில் சிங்கள மக்களைக் காராக்கிருகத்தில், அதிகாரவெறி பிடித்தவர்கள் தள்ளி வருத்திய காலத்தில், எங்கள் சுயமரியாதையைக் காப்பாற்றுவதற்காக, முதலாம் உலகயுத்த காலத்தில், ஜெர்மன் நீர்மூழ்கி விபத்துக்களையும், ஆபத்துக்களையும் பாராமல் இங்கிலாந்து சென்று எங்கள் குறைகளை விளக்கி வாதாடி, எம் கௌரவத்தைச், சுயமரியாதையை, நிலைநாட்டியஇராமநாதப்பெருந்தகைதான் இன்று இலங்கையின் முன்னேற்றத்துக்கு மூலகாரணர்”.

இவ்வாறு, தென் மாகாணத்தில், வலஸமுலை என்னுமிடத்திற் சென்றவாரம் நிகழ்ந்த சுதந்திரதினக் கூட்டத்தில், மாத்தறை நகரசங்கத் தலைவர் மிஸ்டர் [illegible] குறிப்பிட்டார். மேலும் அவர் கூறியதாவது:

“இந்தச் சுதந்திர தினத்திலேகாம் நினைவு கூரவேண்டிய வீரபுருஷர்களிற் சிரேட்டர் சேர். பொன். இராமநாதன்,சேர். பொன். அருணாசலம் என்னும் இருவருமே; இந்த இருவரும் எமக்கு ஆற்றிய சேவையை ஓர்போதும் — இலங்கை உள்ள அளவும் மறக்க முடியாது அவர்களுடன் சேர் ஜேம்ஸ் பீரிஸ, எப். ஆர். சேனாநாயக்கா என்பவர்களும் எங்கள் சுதந்திரத்திற்காக தம் வாழ்நாளை அர்ப்பணஞ் செய்தார்கள்.

இத்தகைய தியாக புருஷர்களின் அடிச்சுவட்டை நாம் பின்பற்றுவோமாக. எங்களுக்குள்ளே சமூகச் சண்டை வேண்டாம். சிங்களர் — தமிழர் — இல்லாமியர் என்றபேதம் வேண்டாம். எல்லாரும் ஓர் இலங்கைத்தாயின் மக்களாகத் தொண்டாற்றிப் பூரண சுயராச்சியத்தைஅடை[illegible]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜின்ஞ திண்டாட்டம்!

## என்ன செய்வதென்று விழிக்கிருர்!

.... ஸ்ரீதரன் ...

ஜின்ஞ ஓர் சிறந்த நியாயவாதி எனப் பெயர் எடுத்த போதிலும், எதிலும் ஓர் குற்றம்காட்டி விஷயங்களைப் பின் போடச்செய்வதில் மகா சமர்த்தர். பிரிட்டிஷாரின் கைப்பிள்ளையாக இருந்த அவர் இன்று பிரிட்டிஷார் இந்தியாவை விட்டுப் புறப்படத் தீர்மானித்திருப்பதைக் கண்டு கலங்குகிருர். பாகிஸ்தான் பல்லவி பாடி பிரிட்டிஷாரை இன்னும் இந்தியாவில் தங்கிநிற்கச் செய்யலாம் என அவர் நினைத்த எண்ணங்களுக்கு பிரிட்டிஷ் தொழிற்கட்சி மண்போட்டுவிட்டது. இதன் பயனுக ஜின்ஞ இன்று இருதலைக் கொள்ளி எறும்பு போலத் தவிக்கிருர்.

### பாகிஸ்தான் பயன்

பிரிட்டிஷார் இந்தியாவை இருதுண்டாக்கி, ஹிந்துஸ்தானை ஹிந்துக்களுக்கும், பாகிஸ்தானை முஸல்மான்களுக்கும் வழங்கிவிட்டுப் போய்விடுவர் என வைத்துக்கொள்ளுவோம். அதனுல், முஸல்மான்கள் உண்மையான சுதந்திரமும், தற்பாதுகாப்பும் மனச் சாந்தியும் அடைவார்? இன்று பாஞ்சாலத்தில் மூஸ்லிம்களே பெரும் பான்மையினராக வசிக்கிறபோதிலும், நாளிதுவரை, மூஸ்லிம்லீக் ஓர் மந்திரசபையை அமைக்க முடியவில்லை. மாலிக் சேர். கிளிர்ஹையத்தான் பதவியை விட்டு விலகி இவ்வளவு நாளாகியும், லீக்கர் மந்திரசபையமைக்கத் தயங்குகிருர்கள். தயக்கம் நீங்கி ஓர் மந்திரசபையை அமைத்தாலும் பாஞ்சாலத்தில் அமைதி நிலவுமா?

### பாகிஸ்தான் மாகாணங்கள்

பாகிஸ்தான் மாகாணங்களிற் பிரதானமானவை பாஞ்சாலமும், வங்காளமும்; பாஞ்சாலத்தின் மூஸ்லீம்கள் 100-க்கு 53 விகிதம் வரையே இருக்கிருர்கள். மிதியான ஹிந்துக்களும் சீக்கியரும் ஓர்போதும் மூஸ்லிம் ஆட்சியைச் சகிக்கமாட்டார்கள். பாகிஸ்தானம் ஏற்பட்டு விடுவதாயிருந்தால், பாஞ்சாலத்தைத் துண்டாடித் தமக்கொருபாகம் தரவேண்டும் என்றும் அதனைச் சீக்கிஸ்தானுகத்தாம் பரிபாலிப்பதென்றும், சீக்கியர் நிச்சயித்திருக்கிருர்கள். பாகிஸ்தானுக்குள், சீக்கியஸ்தான் உண்டாய்விட்டால் தம்பாடு அதோகதிதான் என்று லீக்கர் நடுங்குகிருர்கள்.

### வங்காளத்தில்

வங்காளத்திலும் இப்படித்தான். அங்கே ஹிந்துக்கள் 100க்கு 45 விகிதம்வரை இருக்கிருர்கள். மேற்கு வங்காளத்தில் ஹிந்துக்களே பெரும்பான்மையினராக இருக்கிருர்கள். பாகிஸ்தான் ஏற்படுவதானுல், மேற்கு வங்காளத்தைப் பிரித்து ஹிந்துஸ்தானத்துடன் சேர்க்க வேண்டுமென வங்கஹிந்துக்கள் இப்போது கிளர்ச்சி செய்கிருர்கள். மேற்கு வங்கம் பிரியுமானுல், பாகிஸ்தான் தலையில்லாத முண்டம் போலாய்விடும்.

### ஹிந்துஸ்தானத்தில்

ஹிந்துஸ்தானத்துக்குச் சேரக்கூடிய மாகாணங்களில், மூஸ்லீம்கள் 100 க்கு 10 விகிதம்தான், அங்கே ஹிந்துக்களுக்கு முஸல்மான்களின் பயம் இல்லை ஆனுல் பாகிஸ்தான் மூஸ்லீம்களுக்குச் சதா ஹிந்துக்கள் பயமும் சீக்கியர் பயமும் இருக்கவேவரும்.

### பாகிஸ்தான் கிடைக்குமா?

ஆனுல் உண்மையிற் பாகிஸ்தான் கிடைக்குமா? இந்த நிலைமையில் பாகிஸ்தானை ஜின்ஞ விரும்புவாரா? ஜின்ஞ அவ்வளவு முட்டாளல்ல. பாகிஸ்தான் கிடைத்தாலும் அது தனித்தியங்க முடியாது என்பதை ஜின்ஞ சாகிப் அறியாமல் இல்லை. அவர் எவ்வளவு சலாக்கியங்களைக் காங்கிரசிடமிருந்து பெறமுடியுமோ அவ்வளவையும் பெற்று இந்திய ஐக்கிய ராச்சியத்தை ஸ்தாபிப்பதில் உதவிசெய்வர் என்பதே அரசியல் வாதிகளது அபிப்பிராயமாகும்.

---

## திருச்சி ரேடியோ நிகழ்ச்சி

### புதன் மார்ச் 12

காலை: 7-15 ஆரம்பம் 7-20 தமிழில் செய்திகள் 7-30 எம் கனகசபைப்பிள்ளை பாட்டு 8 ஆங்கிலத்தில் செய்திகள் 8-15 டி சௌடையா வயலின் 8-30 ஜி ஜானகி பாட்டு 9 முடிவு.

1 ஆரம்பம் 1-30 ஆங்கிலத்தில் செய்திகள் 1-40 ஜி ஜானகி பாட்டு 2 தமிழில் செய்திகள் 2-05 ஜானகி பாட்டு 2-15 கல்வி ஒலிபரப்பு 2-45 முடிவு

5 எம் கனகசபைப்பிள்ளை பாட்டு 5-40 இசைப்பயிற்சி 6 ஆங்கிலத்தில் செய்திகள் 6-10 அறிவிப்புகள் 6-15 கிராம நிகழ்ச்சிகள் 7 என் ஸ்ரீ கிருஷ்ணன் கோஷ்டி 7-15 வானொலி வாத்ய கோஷ்டி 7-30 தமிழில் செய்திகள் 7-45 மதராஸில் உள்ளபடி 8 ப்ரல்வாதக 8-15 மதராஸில் உள்ளபடி 6 ஆங்கிலத்தில் செய்திகள் 9-30 லண்டனிலிருந்து செய்திகள் 9-45 அறிவிப்புகள் வானிலை 9-45 மதராஸிலுள்ளபடி 10 ஐரோப்பிய சங்கீதம் 10-30 முடிவு.

### வியாழன் மார்ச் 13

காலை 7-15 ஆரம்பம் 7-20 தமிழில் செய்திகள் 7-30 டி எம் ஹில்ஸவல்லி பாட்டு 8 ஆங்கிலத்தில் செய்திகள் 8-15 தனம்மாள் வீணை 8-30 டி கே சீதாராமன் பாட்டு 9 முடிவு.

1 ஆரம்பம் 1-30 ஆங்கிலத்தில் செய்திகள் 1-40 டி எம் ஹம்ஸவல்லி பாட்டு 2 தமிழில் செய்திகள் 2-05 டி எம் ஹம்ஸவல்லி பாட்டு 2-15 கல்வி ஒலிபரப்பு 2-45 முடிவு.

மாலை 5: கண்டதேவி எஸ் அளகிரிசாமி வயலின் 5-40 இசைப்பயிற்சி 6 ஆங்கிலத்தில் செய்திகள் 6-10 அறிவிப்புகள் 6-15 கிராம நிகழ்ச்சிகள் 7 சித்ரகானம் 7-30 தமிழில் செய்திகள் 7-45 மைலம் பி செச்சேலு முதலியார் பாட்டு 9 ஆங்கிலத்தில் செய்திகள் 9-15 மனைவியைக் காதலித்த மனிதன் 9-30 லண்டனிலிருந்து செய்திகள் 9-40 அறிவிப்புகள் வானிலை 9-45 கண்டதேவி எஸ் அளகிரிசாமி வயலின் 10-20 முடிவு

### வெள்ளி மார்ச் 14

காலை 7-15 ஆரம்பம் 7-20 தமிழில் செய்திகள் 7-30 பி வைத்தியநாதன் பாட்டு 8 ஆங்கிலத்தில் செய்திகள் 8-15 திருச்சி வாத்யகோஷ்டி 8-30 பி பி ராஜம்மாள் பாட்டு 9 முடிவு.

1 ஆரம்பம் 1-30 ஆங்கிலத்தில் செய்திகள் 1-40 பி வைத்தியநாதன் பாட்டு 2 தமிழில் செய்திகள் 2-05 பி வைத்தியநாதன் பாட்டு 2-15 கல்வி ஒலிபரப்பு 3 முடிவு

மாலை 5: கீவளூர் டி எம் ஷண்முகசுந்தரம் பாட்டு 5-40 குரான் ஷரீப் 6 ஆங்கிலத்தில் செய்திகள் 6-10 அறிவிப்புகள் 6-15 கிராம நிகழ்ச்சிகள் 7 வி மீ ட்சுந்தரம்பிள்ளை நாகஸ்வரம் 7-30 தமிழில் செய்திகள் 7-45 விநோதப் பிரசங்கங்கள் 8 கீவளூர் டி எம் ஷண்முகசுந்தரம் பாட்டு 8-30 வி மீனாட்சிசுந்தரம் நகஸ்வரம் 9 ஆங்கிலத்தில் செய்திகள் 9-15 குரல்கள் 9-30 லண்டனிலிருந்து செய்திகள் 9-40 அறிவிப்புகள் வானிலை 9-45 சந்தி இசை 10 நீங்கள் கேட்டவை 10-30 முடிவு.

---

# தமிழன் துரோகியல்ல

ஜம் பக்கத் தொடர்ச்சி

ஜி. பொன்னம்பலத்துக்குச் சொன்னேம், அவர் அதற்கு இணங்கவில்லை. தமிழ்க் காங்கிரசில் இருந்துகொண்டு தமிழர்க்குத் தொண்டாற்ற முடியாதென்பதை உணர்ந்து நானும் தமிழ்ப் பிரதிநிதிகள் சிலரும் காங்கிரஸ் காரியதரிசியும் விலகினேம். நாம் இனிய மாங்கனிபெற எண்ணினேம். ஜி, ஜி. மரமாங்காய் தர நின்ருர். தாம் கொண்ட கொள்கையே சரி, மற்றையோர் கூறுவன அபத்தம் என்னும் சர்வாதிகார மனப்பான்மை அவரிடம் குடிகொண்டிருந்தது. காலங்கருதி வினை செய்யவேண்டியதை அவர் மறந்தார். 'அதோ வருகிறது, இதோ வருகிறது; இங்கிலீஷ்காரர் எம்பக்கம் நிற்கின்றனர்; குடியேற்றநாட்டு மந்திரி எம்விஷயத்தில் கண்ணியமாயிருக்கின்ருர்' என்றெல்லாம் சொல்லிவந்தார். அவர்வழி நிற்கின் முடிவு என்னுதும் என்பதைத் தமிழ்மக்கள் ஒவ்வொருவரும் நம்பிவரவேண்டும். திரு. ஜி. ஜி. பொன்னம்பலத்தைச் சீமைக்கு ஆசிகூறி அனுப்பிவிட்டு அவர் இல்லாச் சமயத்தில் இங்கிருந்து சதிசெய்தேனும்!— நம்பிக்கைத் துரோகஞ் செய்தேனும்! — தமிழரைச் சிங்களவருக்கு விற்றேனும்! இப்படி என்மேற் சிலர் வீண் அபவாதங்களைச் சுமத்துகின்றனர்.

"இங்கே எரியும்விளக்கின்சாட்சியாக உங்கள் முன்னிலையில் சத்தியம் செய்கின்றேன். நான் ஜி. ஜி.யை இங்கிலாந்துக்குப்போகச் சொல்லவுமில்லை; தமிழரை விற்கவுமில்லை. ஜி. ஜி. அறிக்கை ஒன்றுக்குக் கைபொப்பம் வாங்க என்னிடம் வந்திருந்தார். நான் அதற்கு மறுத்துவிட்டேன்.

அநேக பிரமுகர்களை என்னிடம் அனுப்பினர். அவர் அனுப்பிய பிரமுகர்களில் இலங்கை இந்தியக் காங்கிரஸ் காரியதரிசி திரு. மோத்தாவும் ஒருவர். அவர் ஜி. ஜி.யின் விஷயமாக ஒருநாளிரவு நடுயாமம் வரையும் என்னேடு பேசிக் கொண்டிருந்தார். ஜி. ஜி.க்குச் சொன்ன பதிலே அவருக்குங் கூறினேன். சில விஷமிகள் பொதுமக்கள் என்மேற் கொண்ட நல்லெண்ணத்தைக் களையத் துர்ப்பிரசாரங்களைப் பரப்பி வருகின்றனர். ஒரு கற்புள்ள பெண்ணை ஒருவன் விபசாரி என்று ஒரு கதையை உண்டாக்க அது காட்டுத் தீபோற் பரவுகிறது. ஒரு யோக்கியனைத் தூர்த்தன் என்று கதை புனைய அதுவும் பரவுகிறது. பொய் விரைவிற் பரவும். ஆனுல் நிலைக்குமா? கெட்டிக்காரன் புழுகு எட்டு நாளைக்கு என்பர் நான் மீண்டும் தமிழ்க் காங்கிரசில் சேர்ந்துவிட்டேனும், மன்ருடினபடியால் அவர்கள் ஒருவாறு இரங்கி என்னை வலி—கிழக்குப்பகுதிக்கு அபேட்சகனுக நிறுத்தியிருக்கின்றனராம். இவ்வித பேச்சுக்களை நீங்கள் நம்பவேண்டாம்.

"பிறர் என்மேல் குற்றங்கூறினும் அதைப் பொறுத்து நடக்கும் சுபாவம் என்னிடம் உண்டு. குற்றம் சொல்லவேண்டியவன் நான். அவ்வாறிருந்தும் நான் இதுவரை பேசாதிருந்தேன். நான் அடக்கமாயிருந்தது தங்கள் விஷமப் பிரசாரத்துக்கு வாய்ப்பென அவர்கள் கருதுகின்றனர். இனிமேல் ஆங்காங்கு நடக்கும் கூட்டங்களில் உண்மையை எடுத்துச் சொல்வேன். அப்போது மக்கள் நன்மை தீமைகளை ஆராய வசதியிருக்கும், இலங்கையில் இப்போதுள்ள கட்சிகளில் ... கட்சி சிறந்தது.

ஆதலால் நான் அதிற் சேர்ந்தேன். அக்கட்சியில் நான் சேர்ந்ததால் கிடைத்தபலன்களைக்கண்ணுரக்காண்கிறீர்கள். சமசமாஜக் கட்சியென்று ஒரு கட்சியிருக்கின்றது. அவர்கள் இரத்தம் சிந்த அஞ்சாதவர்கள். சில உரிமைகளைப் பெறுதற்காகப் பெரும் பாதகங்களைச் செய்வார்கள். வடபகுதியில் நடந்த புகையிரத விபத்துக்குக் காரணர் அவர் அல்லவா? அதில் எவ்வளவு உயிர்ச்சேதமும் பொருட்சேதமும்நிகழ்ந்தனஎனபது உங்களுக்குத்தெரியும. அவர் கட்சி எம்மனேர்க்குதவாது.

"யாழ்ப்பாணம் ஒரு தனியரசாயிருப்பின் சிங்களரைப் பகைக்கினும் பகைக்கலாம், அல்லது பாகிஸ்தானே வேண்டுமென்று கோரினும் பகைக்கலாம். யாழ்ப்பாணத்தில் இரண்டும் இல்லை. ஆதலால் செய்யத்தக்கது பெரும்பான்மை மக்களோடு சேர்ந்து வாழ்வதே.

"இலங்கையிலுள்ளசகல சாதியினரும் சேர்ந்து சுயாட்சி பெற ஒரு அறிக்கை (வெள்ளையறிக்கை)யைத் தயாரித்தார்கள். அதற்குக் கைச்சாத்திட்ட தமிழரில் நானும் ஒருவன். அவ்வாறு செய்ய மறுத்திருப்பின் தமிழர் இலங்கைசுயாட்சிபெறத் தடையாயிருந்தனர் என்னும் நீங்கா வசை சரித்திரத்தில் வந்து சேரும். நாம் ஐஞ்ஞூறு வருடங்களுக்குமேல் அடிமையாயிருந்தது போதாதா?

கூட்டம் 12 மணிவரையில் நிறைவேறியது.

---

## நெல்வயல் விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோடு 2£0 C.

மேற்படி வழக்கில் டிஸ்திறிக் நீதிபதியின் கட்டளைப்படியும் உத்தரவுப்படியும் கீழே விபரிக்கப்படும் நாவற்குளியி லிருக்கும் திறம் நெற்காணி விற்பனவுக் கிருக்கிறது. அதை விலைக்குவாங்க விரும்புபவர்கள் கீழ்க்காணும் எனது விலாசத்துக்கு அல்லது மேற்படி பெரியகோட்டுச் சக்கிடுத்தாருக்கு தாங்கள் வாங்கக் கூடிய அதியுயர்ந்த விலையைக் குறிப்பிட்டு இந்த விளம்பரத் திகதி முதல் 21 நாட்களுக்குள் மனுப்பத்திரம் அனுப்பவேண்டியது. காணி நல்லதும் போதியதுமான உறுதிப் பெலப்புடையது. வேண்டியவர்கள் எனது சீராவியடி ரோட்டு 15-ம் இலக்க வீட்டில் குறித்த காணி உறுதிகளைப் பார்வையிடலாம்.

காணிவிபரம்:

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் தென்மராட்சிப் பகுதி நாவற்குளி இறை: 'வடக்குக் கூத்தான் வயல் நெல் பரப்பு 84 இதற்கு எல்லைகிழக்கு சண்முகம் செட்டியார் வைத்திலிங்கம் செட்டியாரின் ஆதனம், வடக்கு ஆறுமுகம் பொன்னம்பலத்தின் உரிமைக்காரருக்குரிய ஆதனம் மேற்கு குழந்தைவேலு கைம்பெண் குஞ்சிப்பிள்ளையின் ஆதனம்' தெற்கு கணபதி சுப்பனின் ஆதனம். இதடங்கலும்.

க. ஐயாத்துரை.

ஷெ வழக்குத் தத்துவகாரனின் பிறக்றர்.

ஆனந்தவாசம்,

15 சீராவியடி ரோட்டு

யாழ்ப்பாணம், 10—3—47.

Mis 348 11—3—47.

## பெயா மாற்றம்

வல்வெட்டித்துறை வல்வெட்டி முருகர் சின்னையா ஆகிய நான் அறியத் தருவது: சகல சாதனங்களிலும் முருகர் சின்னையா என்றே ஒப்பமிட்டு வந்தேன் என்றும் என் பிறப்புப்பதிவில் முருகர் முத்தையன் என்று பதியப்பட்டிருந்ததென்றும், 1946-ம் ஆண்டு மார்கழி மாசம் 12 ம் தேதி முடிந்த சத்தியக் கடதாசியின்படி இனிமேலும் முருகர் சின்னையா என்றே ஒப்பமிடுவேன்.

இங்ஙனம்,

மு. சின்னையா,

வல்வெட்டி,

வல்வெட்டித்துறை,

6—3—47

Mis 339, 1¹—3—47.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யுத்த பயம்

## இல்லையென்கிறார் அட்லி

இப்போது உலக அரசியல் நிலைமையை யோசிக்குமிடத்து ஓர் உலக யுத்தம் மூண்டுவிடும் என்று பலர் நினைக்கிறார்கள். ஆனால் அப்படியான பயம் வேண்டியதில்லை. ருஷியா, அமெரிக்கா, இங்கிலாந்து, என்னும் இந்த மூன்று நாடுகளும் பரஸ்பரம் நல்லெண்ணத்துடனும் விசுவாசத்துடனும்தான் கருமம் ஆற்றுகின்றன. எனவே அவற்றுக்கிடையே யுத்தம்மூள ஏதுவில்லை என்று பிரிட்டிஷ பிரதமர் சென்ற புதன்கிழமை பிரிட்டிஷ் பாராளுமன்றத்திற் கூறினார்.

அப்படியானால், இரண்டாம் மகாயுத்தம் தொடங்கமுன் நாம் வைத்திருந்த இராணுவத்திலும் பார்க்க இப்போது மூன்றுமடங்கு தொகையில் இராணுவத்தை வைத்திருக்கவேண்டிய காரணம் என்ன மிஸ்டர் விலியாக்கன் என்னும் ஓர் அங்கத்தவர் கேட்டார்.

நாம் மாத்திரம் இப்படி இராணுவத்தை வைத்திருக்கவில்லை. எல்லா அரசினரும் இப்படியே அதிக ராணுவத்தை வைத்திருக்கிறார்கள் என்று பிரதமர் மழுப்பினார்.

### தேகவியோகம்

**ஸ்ரீமதி சின்னத்தங்கம்**

சாவகச்சேரிக் கிராமச்சங்கத் தலைவர் திரு என். கணபதிப்பிள்ளை அவர்களின் மாமியாரும், கோலாலம்பூர் புகைரதப் பகுதியில் உத்தியோகம் பார்க்கும் திரு. ச. பொன்னுச்சுவாமி அவர்களின் தாயாருமாகிய ஸ்ரீமதி. சின்னத்தங்கம் சென்ற 8.1-47 ல் தேகவியோகமாயினர்.

### தானவரவு

டையாரின் அபரக்கிரியையின் போது அவருடைய புத்திரராகிய திரு. பொன்னுச்சுவாமிபிள்ளை யாழ்ப்பாணஞ் சைவ பரிபாலன சபைக்குத் தானமாக வரிந்தனுப்பிய ரூபா 5 பெற்றோம்.

மனேஜர்

### 112 பேர்

சென்ற வெள்ளிக்கிழமை கொழும்பிலிருந்து புறப்பட்ட 'குவீன் ஆப். பெர்முடா' என்னும் சப்பலில் சிங்கப்பூர் பினாங்கு என்னுமிடங்களுக்கு 112 இலங்கையர் பிரயாணமாயினர்.

### பகிரங்க விடுமுறை நாட்கள்

இப்போது கிறிஸ்துவ நத்தார் புதுவருட விடுமுறை நாட்களில் ஒன்றைக் குறைத்து, தமிழ் வருஷப்பிறப்புத் தினத்தோடு ஒரு தினத்தை விடுதலை நாளாக அதிகரிக்க உள்நாட்டு மந்திர மகாசபை தீர்மானித்திருக்கிறது.

### தமாஷ் வரியினால் போகவில்லை

ரத்தினபுரியில் நகரசங்கம் தமாஷ வரியை விதிக்கத் தொடங்கியபின் அங்குள்ள சினிமாக் காட்சி பார்க்க ஜனங்கள் போகவில்லை என்று அங்குள்ள சினிமா நிர்வாகஸ்தர்கள் கூறுகிறார்கள்.

### விமானத் தளங்கள்

இலங்கையில் உள்ள அநேக இராணுவ விமானத் தளங்களை இலங்கை அரசாங்கம் தன் பொறுப்பில் வாங்க நிச்சயித்துள்ளது. மின்னேரியாவில் உள்ள விமான நிலையத்தை அரசாங்கம் கூடிய சீக்கிரத்தில் உபயோகத்துக்குக் கொண்டுவருமாம்.

### தவணையிடப்பட்டது

புதிய கல்வித்திட்ட மசோதா சென்றவாரம் அரசாங்க சபையில் விவாதிக்கப்பட்டது. விவாதம் இன்னும் முடியவில்லை. அரசாங்க சபை வருகிற மே மாதம் 13-ந் திகதிவரை தவணையிடப்பட்டிருக்கிறது.

# தொழிலாளர் நலன்

## அரசியல்வாதிகளின் கடமை

இலங்கைத் தோட்டப்பகுதிகளில் இந்திய மக்கள் நிலைமையை அவதானிப்பதற்காகத் தென்னிந்திய காங்கிரஸ் வாதிகள் 6 பேர் சென்ற வெள்ளிக்கிழமை இலங்கைக்குவிஜயஞ்செய்திருக்கிறார்கள், இக் கூட்டத்துக்குத் தலைவராகச் சென்னைச் சட்டசபை அங்கத்தவரான ஸ்ரீ என். எஸ். சோமயஜுலு உளர்.

"இலங்கையில் உள்ள இந்தியத் தோட்டத் தொழிலாளர் அரசியலில் ஈடுபடுவதைச் சிலர் ஆட்சேபிக்கிறார்கள். அவர்கள் ஏன் ஈடுபடக்கூடாது என்பது எனக்கு விளங்கவில்லை" என்று ஸ்ரீ சோமயஜுலு ஓர்பத்திரிகை நிருபர்க்குக் கூறினர். இன்னும் அவர் கூறியதாவது: "அரசியல்வாதிகள் கட்டாயம் தொழிலாளர்க்குவழி காட்டவேண்டும். சிலர் தொழிலாளர் விஷயங்களில் அரசியல்வாதிகள் பிரவேசிக்கவொண்ணாது என்றுவாதிக்கிறார்கள் இது பிழையான வாதம்.

"இலங்கையில் வாழும் இந்தியத் தொழிலாளர் இந்நாட்டைத் தமது தாயகமாகக் கொள்ளும் பட்சத்தில் அல்லது பலகாலம் இருக்கும்பட்சத்தில் அவர்களுக்குச் சகல பிரஜா உரிமைகளும் வழங்கப்படல் வேண்டும். தோட்டங்களில் வதியும் இந்தியத் தொழிலாளரைச் சிலர் அவமானப்படுத்தக்க முறையில் நடத்தினால் பாரதநாடு அதனைப்பார்த்துச் சகித்துக்கொண்டிருக்கமாட்டாது."

### கல்வி மகாநாடு

1947-ம் ஆண்டு மார்ச்மீ 14ம் திகதி வெள்ளிக்கிழமை (மாலை 4 30—7) 15-ந் திகதி சனிக்கிழமை (காலை 7—மாலை 9,களில் யாழ்ப்பாண மத்திய கல்லூரி மண்டபத்தில் ஸ்ரீமதி R. R. செல்லையா வித்தியாதரிசினி அவர்களால் பட்டினவட்டாரக் கல்வி மகாநாடு ஒன்று கூட்டப்பெறும்.

அத்தருணங்களில் பொருட்காட்சியும், ஸ்ரீமதி M. A. சாரதாம்பாள், M.A., ஸ்ரீமான்கள்: K. ஆழ்வாப்பிள்ளை, C.C.S, A. சந்திரராஜஐயங்கார் முதலியோரால் உபந்நியாசங்களும், சங்கீதக் கச்சேரியும் நடைபெறும். பிரவேசக் கட்டணம் கிடையா.

### களியாட்ட வரி

தமாஷ் வரி என்றும் களியாட்ட வரி என்றும் கூறப்படும் வரி, யாழ்ப்பாணம் நகரசங்க எல்லைக்குள் இருக்கும் சகல சினிமா நிலையங்களிலும் வருகிற 15-ம் திகதி தொடக்கமாக அறவிடப்படும். 100-க்கு 20 விகிதம் அறவிட நகரசபை தீர்மானித்திருக்கிறது. இனி சினிமாக் காட்சிக்குப் போவோர் தாம் இதுகாறும் கொடுத்துவந்த விகிதத்துடன் 100-க்கு 20 விகிதம் மேலதிகமாக இறுக்க வேண்டும். இலங்கையின் பல இடங்களில் இவ்வரி 100-க்கு 15 விகிதமாகவே விதிக்கப்பட்டிருக்கிறது என்பதும் ஈண்டுக் குறிப்பிடத்தக்கது.

### ஸ்ரீ கிருஷ்ண மேனன்

பண்டித ஜவஹர்லால் நேருவின் ஐரோப்பியத் தூதுவராயுள்ள ஸ்ரீ வி. கே. கிருஷ்ணமேனன் சென்ற வாரம் செக்கோஸிலவாக்கியாவுக்குச் சென்று அந்நாட்டு அரசாங்க மந்திரசபையினருடன், அந்நாட்டில் இந்தியா இராஜரீகத் தொடர்பு வைப்பது சம்பந்தமாகச் சம்பாஷித்தார். சம்பாஷணை மிகவும் திருப்திகரமான முறையில் முடிவுற்றதாம். ஸ்ரீ மேனன் இனி, இற்றலிக்கும் பிரான்சுக்கும் விஜயஞ் செய்துவிட்டு லண்டனுக்கு ... 13-ம் திகதி மீளுவார்.

# கந்தபுராணக் கவி நுட்பம்

## துணைவர் வரு படலம்

வித்துவசிரோமணி ந. ச. பொன்னம்பலப்பிள்ளை யவர்கள் வாய்க் கேட் டெழுதப்பெற்ற பிரதியிலிருந்து எடுத்த அரும் பெருங் குறிப்புக்கள் இப் [ ] பகரக் குறியீட்டுடன் வெளியிடப்பட்டுள்ளன.

தேவியது கேட்டுமைந்தர்க் கருள்புரிய வவர்க்கெல்லாஞ் சிவன்வேல் வேறு
தாவில்சுடர் வாளுதவி வியர்ப்பில்வரு மோரிலக்கந் தநயரோடு
நீவிர்களு மொன்றிநுங்கட் கிறையவனு கியசேயை நீங்கலின்றி
யேவலவன் பணித்தனசெய் தொழுகுதிரென்றுனவரு மிசைந்து தாழ்ந்தார்.

உமாதேவியார் கைலாசபதியின் திருவாக்கை ஏற்று அப்புதல்வர்க்கு அநுக்கிரகஞ் செய்ய, சிவபிரான் அக்குமாரர் ஒன்பதின்மருக்கும் குறைவுறுத வாட்படையைத் தனித்தனி ஈந்தருளி, உங்கள் அன்னையரின் மேனியில துளித்த வியர்வையிலிருந்து தோன்றிய இலக்கமென்னுந் தொகை கொண்ட பிள்ளைகளுடன் நீங்களுஞ் சேர்ந்து உங்களெல்லீருக்குந் தலைவனாகிய செவ்வேளுடன் பிரிதலின்றி, அச் செவ்வேள் இட்ட ஏவல்களைச் செய்து வருவீர்களெனக் கட்டளையிட்டருள, அந்நவ வீரர்களும் அங்ஙனமே (செய்கின்றோம்) என வுடன்பட்டுப் பரமபதியை மீட்டும் வணங்கினார்கள் என்பது கருத்து.

கேட்டு - ஏற்று, இதனைப் "பெண்புத்தி கேட்டிடும் பேதையும் பதரே" என்பது போன்ற வழக்காலுணர்க; கொல்லரால் உலை முகத்திலிட்டுக் காய்ச்சி அடித்து ஆராவியாக்கப்படுதல் யுத்தத்தில் ஒடிதல் முதலிய ஊனங்களில்லாத தெய்வத்தன்மை பொருந்தியதாய் தரிப்பிடித்தலின்றி என்றும் ஒளியோடுகூடிய வாளாதலின் "தாவில் சுடர்வாள்" என்றார். வியர்ப்பில்வரும் ஓரிலக்கந்தநயர் என்றது-உமாதேவியார் நவசத்திகள் மீது சீற்றமுற்றவழி அவர்கள் அச்சமுற அவ்வச்சங்காரணமாக மேனி வியர்ப்ப, அவ்வியர்வைத் துளிகளில் திருவருளாற் றோன்றிய இலக்கம் வீரரை; இது முன்னர்க் கூறப்பட்டது; அங்ஙனமாயின் நவசத்திகளின் மேனியிலே முந்தித் துளித்த வியர்வையில் உடனே தோன்றிய இலக்க வீரர், அந்நிகழ்ச்சிக்குப் பிந்தித்தோன்றிய வீரவாகுதேவர் முதலாம் நவவீரருக்கும் தம்பிமாரெனக் கூறுதல் பொருந்ாதே யெனின், அற்றன்று, அந்த இலக்கம் வீரரும் நவசத்தியருடைய மேனியிற் கிளர்ந்த வியர்வையிற் றோன்றுவதற்கு முந்தியே இந்த நவவீரர்களும் கருவிற் பொருந்தியவராய், தேவியிட்ட சாபத்தினால் வெளிப்படலின்றி, பூரண ஞானத்தோடும் வளர்ச்சியோடுங் கூடியவர்களாய்க் கருவில் வதிந்தபடியே யோகசாதனஞ் செய்துகொண்டிருந்தார்களாதலாலெனக; இதனை "இகலுமாமணி மகளிர்தங் கருவினுளிறைவன் - புகழுநந்தியங் கணத்தவர் குழவியாய்ப்போந்து - நிகரில் காளையராகி யீற்றிருந்தனர் நெறிசேர் - சுகனெனும்படி..." என இப்படலத்திற்றுனே வந்துளள கஎ-ந் திருவிருத்தத்தானும் "இந்த வீரரொன்பதின்மரும்......' என்பதை முதலாகவுடைய ௩௪-ம திருவிருத்தத்தானு முணர்க. (36)

ஒன்பானு மிலக்கத்தோ ரோரிலக்கத் தோர்தம்மோ டொன்றிப் புல்லி
யன்பாகி யெம்பெருமான் சினகரத்தை யகலாம லங்கண் வைக
மென்பரினல் புரையும்விழிச் சத்திகளோன் பதின்மர்களும் விமலக்கன்னி
தன்பாலை யிகலாம லவன்பணித்த தொழில்புரிந்து சார்தலுற்றார்.

ஒன்பது என்னும் எண்ணைக் கொண்டவர்களாகிய (நவ) வீரரும் லக்கமென்னுந் தொகைகொண்ட வீரர்களுடன்ஒற்றுமைபூண்டு சேர்ந்து பரஸ்பரம்) அன்போடு, எங்கள் தலைவராகிய கைலாசபதியின் செம் பொற்றிருக்கோயிலை விட்டகல்வதின்றி அங்கேதானே இருப்ப, மிருதுவான கருங்குவளைமலரை நிகர்த்த கண்களையுடைய நவசத்தியரும், மலரகிதையும் நித்திய கன்னிகையுமாகிய உமாதேவியாரின் சன்னிதியை விட்டகலாதவராய், அத்தேவி பணித்த குற்றேவல்களைச் செய்துகொண்டு வைகுவாராயினர் என்பது கருத்து.

ஒன்பானு மிலக்கமென்பதில் இலக்கம் எண், ஓரிலக்க மென்பதில் இலக்கம் ஒருதொகை; தமது அருளின்றி நவசத்தியர் கருப்பமெய்தியமையால், அவர்கள்மேற் சீற்றமுற்று அவர்களுக்குச் சாபமிட்ட உலகமாதா பின்னர் இறைவனருளிய வண்ணம் அச்சாபத்திற்கு விமோசனங் கூறி அச்சத்திகளைக் கருவுயிர்க்கச்செய்து, அவர்கள் பெற்ற மைந்தர் ஒன்பதின்மருக்கும் அருள்புரிந்து அந்நவசத்திகளையும் ஆட்கொண்டு தம் குற்றேவல் செய்யப் பணித்தாரென்பது இப்படலத்தாற் புலப்படக்கிடக்கின்றது; இங்கே சகல சராசரங்கட்கெல்லாம் அன்னையாகவுள்ள இறைவி நவசத்திகள்மீது முற்கொண்ட சீற்றமும் அவர்கட்கிட்ட சாபமும் மறக்கருணையாம்; இறைவன் திருவருளின்படி இறைவி பின்னர்ச்செய்த சாபவிமோசனமும் நவசத்தியர்க்கும் அவர் வயிற்றிற் பிறந்த புதல்வர்க்குஞ் செய்த அருளும் அறக்கருணையாம். இச்செயல்களெல்லாம் ஆன்மாக்களை யீடேற்றும்பொருட்டு நடக்கும் திருவருட் செயல்களே யன்றி இவைகள் திருவருட் சத்தியாகிய இறைவியின் எண்குணங்களையும் பாதிக்கமாட்டாவென்பதையும், இறைவி தாம் இயல்பாகவே மலங்களாற் பந்திக்கப்படுதலின்றி விளங்குவதோடு தம்மையடைந்த உயிர்களின் பாசத்தையும் நீக்கவல்ல கருணைபூண்டவ ளென்பதையும் சகல சராசரங்களையும் பெருமற் பெற்ற நித்திய கன்னிகை யென்பதையும் நம்மனோர்க்குத் தெருட்டுதற் பொருட்டே ஆசாரிய சுவாமிகள் இங்கே இறைவியைப்பற்றிக் கூறும்போது வேறு மொழிகள் கூறாது "விமலக்கன்னி" எனக் கூறிப் போந்தன ரென்க. (37)

துணைவர்வருபடலம் முற்றும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாணம் ஐக்கியலாபநிதி

1918-ம் ஆ ஸ்தாபிதமானது.

வங்கிக்காரர் மூலநிதி 8 லட்சம் ரூபா.
இதுவரையிற் கொடுக்கப்பட்ட பங்குப் பண ் ரூபா

**134,3670**

**100 ரூபா விகிதமான 8000 பங்குகள்**

பங்குப்பணங் கட்டுமுறை.

மாசமொன்று 1 ரூபா விகிதமாக 75 மாசகாலத்திற்கு மாசந்தோறும் கட்டப்படவேண்டியது. குறித்த காலமுடிவில பங்கொன்றுக்கு ரூபா 100 திருப்பிக்கொடுக்கப்படும். பங்குகள் எந்த நேரமும் வாங்கலாம்.

தினசரிப் பற்றுவரவு

எச்சநிதி சராசரி 500 ரூபாவுக்குக் குறையாமல் இருக்குமானல் ஒரு விகித வட்டியுடன் தினசரிப் பற்றுவரவு செய்யலாம்

தவணை வரையறுக்கப்பட்ட க்ஷேமப்பணம்

க்ஷேமப்பணம் 3 மாசம், 6 மாசம், 9 மாசம், 12 மாசம் என்னும் காலங்கள் வரையறுத்து ஏற்படும் வட்டியும் முறையே 1 விகிதம், 2 விகிதம் 4 விகிதம் 6 விகிதமாகக் கொடுக்கப்படும்.

உண்டியல்கள்

கொழும்பிலுள்ள "நாஷனல்" வங்கியிலும் "இம்பீரியல்" வங்கியிலும் இந்தியாவிலுள்ள பிரதான பட்டினங்களிலும் மாற்றத்தக்க விதமாகக் கொடுக்கப்படும். தொடுவாய் இராச்சியப் பகுதியிலுள்ளவர்களுக்குக் கொடுக்கவும் வாங்கவுமான விசேஷ ஒழுங்குகள் செய்யப்பட்டிருக்கின்றன.

இந்தியாநோட்டு வட்டத்திற்கு மாற்றிக்கொடுக்கப்படும்.

க ட ன் .

நகைகள் ஈடுவைத்துக்கொண்டு கடன் கொடுக்கப்படும். வட்டி 9 விகிதம் அறவிடப்படும். (ஈடுவைத்தவர்கள்) முதலையும் பாகம்பாகமாகக்கொடுக்கலாம். இன்னும் வேண்டிய விபரங்களை என்மூலமாக அறிந்துகொள்ளலாம்

S. கனகசபை
சிறுப்பர்.

Mis 246 20-11-46—20-11-47 (தி)



# NEW IRON SAFES FOR SALE

## புதிய இரும்புப் பெட்டிகள்

விற்பனைக்கு வந்துவிட்டன

யுத்த காலத்திற்குப்பின் இதுவே முதல் இறக்குமதி

வியாபார ஸ்தலங்களுக்கும், வீடுகளுக்கும், அடைவுகடைகளுக்கும் பாவிப்புக்கு ஏற்றஅளவுகளில் குறைந்தவிலையில்திறமான நூதனமுட்டுக்கள்அமைக்கப்பெற்ற இரும்புப்பெட்டிகள் விற்பனைக்குத் தயாராக இருக்கின்றன. தங்களுக்குத் தேவையான பெட்டிகளை கீழ்க் காணும் விலாசத்தில் நேரில் பார்த்து தெரிந்து கொள்ளுங்கள்.

ஸ்ரீ பத்மநாத ஸ்ரோர்
பெரியகடை, யாழ்ப்பாணம்.

Tele { Phone 68
grams SIRIRANGAN

S. S. PONNUDURAI
Siri. Pathmanatha Store
105. K. K. S. ROAD
Grand Bazaar JAFFNA.

Mis 270 13-12-45—12-3-47



# பசந்த லேகியம்

இதனல் மூலச்சூடு, இருமல் பித்தப் பாண்டு, குன்மவாய்வு, நெஞ்செரிவு, கைகால் வலி, அசதி, அஜீரணம், வயிற்றுப் பொருமல், புளித்த ஏப்பம், மலச் சிக்கல், பீனிசம், பார்வைக் குறைவு, வெள்ளை, சூலை, சந்து வாய்வு, பிரமேகம் முதலிய வியாதிகள் சூரியனைக் கண்ட பனிபோல் நீங்கும், இந்திரியம் கட்டுப்பட்டு, தேக புஷ்டி, வஜீகரம், பலம் முதலானவை உண்டாகும்.

ஸ்திரீகளுக்குண்டாகும் பிரதானமான வியாதியாகிய சூதகக்கட்டு, பிரசவத்தால் உண்டாகும் பல கொடிய உபத்திரவங்கள் தீர்ந்து மாதவிடாய் குறைந்து அல்லது அதிகமாய்க்காணுதலால்நேரிடும் பல நோய்களும் தீர்ந்து, தேகத்துக்குப்பலம் உண்டாக்கும்.

ஒருறுத்தல் விலை ரூபா 25
அரைறுத்தலுக்கு ரூபா 12-50
கால்றுத்தல் ரூபா 6-25

விலாசம்:

க. ஆறுமுகம்பிள்ளை
கி. 156, செக்கடித்தெரு கொழும்பு

Mis 25 23-4-46 to 22-3-47)



# தந்தரோகசஞ்சீவி

கந்தசாமி வைத்தியர்

## சந்தனாதித் தயிலம்

ஒரு கிழமைக்கு வைக்கக்கூடிய
ஒரு அவுன்சு தயிலம் விலை ரூ. 2

ஒவ்வொருநாளும் ஒருசதவீதம் வைத்துக் கடைசியன்று சீயாக்காய் வெந்தயம் அவித்துத் தப்பி வென்னீரில் தோய்வது. பத்தியம்: புகையிலையாகாது ஆடினபல்லு உடனே இறுகும், முரசு வளரும், வாய்ப் புண் வீக்கம் தொண்டைப்புண் கம்மல் இருமல் கபாலம் பீனிசம் மாற்றும் உத்தரவாதமுடையது. ஒரு தடவை வேண்டிப் பாவித்து அறியலாம்.

நெருப்புச்சூடு முதல் எந்த வேக்காட்டிற்கும் பூச உடனே வேதனை தணியும்.

வீ. பீ. பீ. யிலும் அனுப்புவோம்.
சீசா முதலிய செலவு வேறு.

விலாசம்:

ஆயுள்வேத சிவசோதி
மெடிக்கல் ஹோல்
வல்வெட்டித்துறை.

வல்லை நரசிங்க வைரவாலயத்திலும் பெற்றுக்கொள்ளலாம்.

Mis 211 1.11-46—30-4-47 (வெ)



# நல்ல செய்தி !

பொய்ப்பல், சுத்திசெய்தற்கு மிக உவந்த

## கெறேடன்ற்

எனும் உயரிய தூள்

விலை: போத்தல் ஒன்று ரூபா 2—00

**தனி ஏஜண்டுகள்**

தி. ஓவர்ஸீஸ் கம்மேர்ஷியல்
(சிலோன்) ஏஜென்ஸி லிமிற்றெட்
தபாற் பெட்டி: இல. 44
167. நோறிஸ்றோட்
கொழும்பு

M. 338—7 25-3-47


விளம்பரமின்றேல் பெரும் பணமில்லை

# சிவ வழிபாடு

(1ம் பக்கத் தொடர்ச்சி

உத்தமோத்தமமாகிய கபிலைப் பசுவின் நெய் முதலியவற்றை அவ்விளக்கில் வார்த்துச் சுடர் கொளுத்திப் பிரகாசிக்கச் செய்தலாம். திருவிளக்குக் கபிலைப் பசுவின் நெய் உத்தமத்தின் உத்தமமும், மற்றைய பசுக்களின் நெய்உத்தமத்தின்மத்திமமும், ஆட்டு நெய், எருமைநெய்கள் உத்தமத்தின் அதமமும் வெள் எள்ளின் நெய் மத்திமத்தின் உத்தமமும் மற்றைய எள்ளின் நெய் மத்திமத்தின் மத்திமமும் இருப்பை நெய் அதமமும் அன்னியமான விருட்சத்தின் விதைகளால் உண்டாகும்எண்ணெகளாலும் பாஷாணம் கெந்தகம் காந்தம் மண்ணெண்ணெய் மாமிசத்தில் உண்டான நெய் சாராயம் விளக்கெண்ணெய் வேப்பெண்ணெய் பாஷாணத்தாலுண்டாகும் வெளிச்சம் ஒயினல் உண்டாகும் தைலம் இவைகளால் விளக்குப்போடுவாராயின் ஈஸ்வர சாந்நித்தியம் குறைந்துவிடும். பிசாச பூதக் கூட்டங்கள் வாசஸ்தானமாய் முடிந்துவிடும். இதனல் ஆத்மார்த்த பூசையிலும் முத்திபைத் தந்தருளும் பரார்த்த பூசையிலும் இந்தத் தைலங்களை நீக்குதல் வேண்டும். சாஸ்திரங்களிற் கூறிய தைலங்களைச் சங்கிரஹித்து அகண்ட தீபத்தை ஸ்தாபித்தல்வேண்டும். (வரும்)

[பசுநெய், தேங்காய்நெய், இருப்பை நெய், இம்மூன்றும் திருவிளக்கிடுதற்கு விசேஷமாக உபயோகிக்கப்படுவன.]

# யாழ்ப்பாணத்தவர் பிரதிநிதி

மலாய்நாட்டிலுள்ள பல சங்கங்களும். ஏனைய ஸ்தாபனங்களும், டெல்கியில் இன்னுஞ் சிலதினங்களில் நிகழவிருக்கும் ஆசியமக்கள் மகாநாட்டுக்குப் பிரதிநிதிகளை அனுப்பும். இந்தப் பிரதிநிதிகளில் இரு பெண்களும் சேர்ந்துள்ளனர்.

மலாயாவிலுள்ள யாழ்ப்பாணத் தமிழ் மக்களின் பிரதிநிதியாக ஸ்ரீ ஈ. ஈ. ஸி. துரைசிங்கமும், சிங்களர் சார்பாக மிஸ்ரர் எச். பீ. தலாலா எனபவரும் ஷை மகாநாட்டுக்குச் செல்வர்.


# இந்துசாதனம்

## ஆங்கில-தமிழ்ப் பிரசுரங்கள்

பத்திரக்கிரயம் (முற்பணமாக ஒருவருடத்திற்கு)

| | யாழ்ப்பாணப்பட்டின எல்லைக்குள். ரூ. ச. | வெளியூர். ரூ. ச. | மலாய்நாட்டுக்கு. ரூ. ச |
|---|---|---|---|
| இந்துசாதனத் தமிழ்ப் பிரசுரம் | 6—50 | 9—50 | 10—50 |
| இந்துசாதன ஆங்கிலப் பிரசுரம் | 6—50 | 9—50 | 10—50 |
| இரு பிரசுரங்களுஞ் சேர்ந்து | 10—50 | 13—50 | 15—00 |

பத்திரக்கிரயம் முதலிய பண விஷயம் எதுவும், இந்துசாதன மானேஜருக்கே அனுப்பப்படல் வேண்டும்.

மனேஜர், இந்துசாதனம், வண்ணார்பண்ணை.


வான்முகில் வழாதுபெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை யரசுசெய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்களோங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக வுலக மெல்லாம்.

Printed and Published by PANDIT V. T. SAMBANDHAN, residing at Vannarponnai, Jaffna, for and on behalf of the Proprietors, the Saiva Paripalana Sabha, Jaffna, at their Press, the Saiva Prakasa Press Vannarponnai, Jaffna, on Tuesday, March, 11, 1947.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org